2000 மார்ச் 30]

அது வேறு திட்டம். இதுபோன்ற கசிவுநீர்க் குட்டைகளுக்கு அதைப் பயன்படுத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 148, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.*

148—

ஓய்வு விடுதி

***29438—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் முந்தல் என்னுமிடத்தில் வனத் துறை ஓய்வு விடுதி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கோ. நயினா முகமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் முந்தல் என்னும் இடம் உள்ளது. வருடம் முழுவதும் தண்ணீர் வரக்கூடிய நீர்நிலைகள் உள்ளன. மிகவும் பசுமையான மழை வளம் கொண்ட இடம். கோடை காலத்தில் நல்ல வெயில் அடிக்கும்போது கூட அங்கே குளுமையாக இருக்கும். அங்கே ஒரு பிரசித்திபெற்ற கோயிலும் உள்ளது. வருடம் முழுவதும் சுற்று வட்டார மக்கள் ஓய்வு எடுக்கச் செல்லும் இடமாகவும் உள்ளது. எனவே, வனத் துறையின் சார்பாக ஓர் ஓய்வு விடுதி கட்டித் தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் நிலைமைக்கேற்ப, தேவைக்கேற்ப விடுதிகள்*

கட்டப்படுகின்றனவே தவிர, உல்லாசப் பயணத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு அல்ல. பெரும்பாலும் ஜன சஞ்சாரமற்ற இடமாகக் காட்டை ஆக்குவதுதான் இவ்விலாக்காவின் முக்கிய நோக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 149, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

149—

விரைவுப் பேருந்து

***25029—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, வள்ளியூரிலிருந்து ஏர்வாடி வழியாகச் சென்னைக்கு விரைவுப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது வழித்தடம் எண் 198 எக்ஸ் மூலம் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு வள்ளியூர், ஏர்வாடி வழியாக இரண்டு பேருந்துகள் 2 ஒருவழிப்பாதைப் பயணமாக இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்து வசதியை வள்ளியூர், ஏர்வாடி பயணிகள் பயன்படுத்திக்கொள்ள வசதியாக உள்ளதாலும், இவ்வழித்தடத்தில் பயணிகள் அடர்வு மிகவும் குறைவாக உள்ளதாலும், வள்ளியூரிலிருந்து சென்னைக்கு ஏர்வாடி வழியாக விரைவுப் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வள்ளியூரிலிருந்து ஏர்வாடி 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால் ஏர்வாடி மக்கள் வள்ளியூர் வந்து நாகர்கோவில்-சென்னை வழித்தடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. எஸ்.வி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். நாகர்கோவில், கன்னியாகுமரியிலிருந்து வருகின்ற பேருந்துகளில் சில நேரங்களிலே